# Tnpsc Economics 2021 Questions Part 1 in Tamil

**More Questions: https://wp.me/p7JanY-6T4**

1. இரண்டு முற்றிலும் வேறுபட்ட தன்மைகளை தொடர்புபடுத்திக் குறிப்பது எவ்வாறு குறிப்பிடப்படுகிறது?

(அ) நுட்பம் (ஆ) சார்ந்திருப்பு **(இ) இரட்டைத் தன்மை** (ஈ) சமமின்மை

(உ) விடை தெரியவில்லை

2. கூற்று (A): இந்தியாவில் நிலத்தின் உற்பத்தித் திறன் குறைவாக உள்ளது.

காரணம் (R): சிறு விவசாயிகள் அதிக உற்பத்தி செய்ய ஊக்குவிப்பு இல்லை.

(அ) A சரி ஆனால் R தவறு

**(ஆ) A மற்றும் R இரண்டும் சரி, மேலும் R என்பது Aவிற்கு சரியான விளக்கம்**

(இ) A தவறு ஆனால் R சரி

(ஈ) A மற்றும் R இரண்டும் சரி, மேலும் R என்பது Aவிற்கு சரியான விளக்கமல்ல

(உ) விடை தெரியவில்லை

3. தாராளமயமாக்கல் சுதந்திரம் வழங்குவது

**(அ) தனியார் துறைக்கு** (ஆ) தொழில் துறைக்கு (இ) பன்னாட்டு வணிகத்திற்கு

(ஈ) வேளாண் துறைக்கு (உ) விடை தெரியவில்லை

4. 1951–ஆம் ஆண்டில் மக்கள் தொகை பெருக்க விகிதம் 1.33%–லிருந்து 1.25% ஆக குறைந்தது எனவே இந்த ஆண்டு இவ்வாறுஅழைக்கப்படுகிறது.

(அ) சரிவு ஆண்டு (ஆ) குறைவு ஆண்டு **(இ) சிறு பிளவு ஆண்டு**

(ஈ) பின்தங்கிய ஆண்டு (உ) விடை தெரியவில்லை

5. இந்தியாவில் ஐந்தாண்டுத் திட்டங்கள் வாயிலாகப் பொருளாதார திட்டமிடலை மேற்கொள்ளும் முறை எங்கிருந்து தருவிக்கப்பட்டது?

(அ) அமெரிக்கா (ஆ) இங்கிலாந்து **(இ) முந்தைய சோவியத் ரஷ்யா (USSR)**

(ஈ) பிரான்ஸ் (உ) விடை தெரியவில்லை

6. பின்வரும் கூற்றுகளில் எது தவறானது?

(அ) சென்னை, இந்தியாவின் மருத்துவத் தலைநகரம்

(ஆ) தமிழகத்தில் ஏழு வேளாண் காலநிலை மண்டலங்கள் உள்ளன

(இ) மிகப்பெரிய காகித உற்பத்தி நிறுவனம் கரூரில் உள்ளது

**(ஈ) இரப்பர் உற்பத்தியில் தமிழகம் முதலிடம் பெற்றுள்ளது**

(உ) விடை தெரியவில்லை

7. பொருத்தமற்ற கூற்றினை கண்டறிக:

I. உழவர் கடன் அட்டை விவசாயிகளுக்கு விரைவாகவும் தகுதிக்கேற்பவும் கடன் வழங்கும் ஏற்பாடாகும்.

II. விவசாய பொருட்களுக்கான அங்காடிக்குழு (APMC) ஒரு சட்டப்பூர்வமான அமைப்பு அல்ல

III. வேளாண் நடவடிக்கைகளை ஊக்குவிப்பது APMC–ன் பணியாகும்

IV. APMC சந்தை சார்ந்த விரிவாக்க சேவைகளை வழங்குகிறது

(அ) I மற்றும் II (ஆ) III மற்றும் IV (இ) IV மட்டும் **(ஈ) II மட்டும்** (உ) விடை தெரியவில்லை

8. கீழ்க்கண்ட இணைகளில் எது தவறாகப் பொருத்தப்பட்டுள்ளது?

(அ) தமிழ்நாட்டின் நுழைவாயில் – தூத்துக்குடி

**(ஆ) ஜவுளி உற்பத்திநகரம் – ஈரோடு**

(இ) இரும்பு நகரம் – சேலம்

(ஈ) பம்ப் நகரம் – கோயம்புத்தூர்

(உ) விடை தெரியவில்லை

9. NITI–ன் பணிகளாவன

1. பரவலாக்கப்பட்ட திட்டம் 2. ஒத்திசைவு

3. திறன் மேம்பாடு 4. வெளிப்புற ஆலோசனை

மேலே கண்டவற்றுள் எவை சரியானவிடை?

(அ) 1 மற்றும் 2 (ஆ) 2 மற்றும் 3 **(இ) 1, 2 மற்றும் 3** (ஈ) 2 மற்றும் 4

(உ) விடை தெரியவில்லை

10. குத்தகை சீர்த்திருத்தங்களில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுடன் தொடர்புடையவை

1. வாடகை கட்டுப்பாடு 2. குத்தகைகால பாதுகாப்பு

3. குத்தகைகாரர்களின் உரிமைகள் 4. நிலஉடைமை உச்சவரம்பு

(அ) 2 மற்றும் 3 மட்டும் (ஆ) 1 மற்றும் 2 மட்டும் (இ) 2, 3 மற்றும் 4 மட்டும்

**(ஈ) 1, 2 மற்றும் 3 மட்டும்** (உ) விடை தெரியவில்லை

11. கீழ்கண்டவற்றுள் நிதி ஆணையத்தின் பிரதான செயல்பாடு அல்லாத ஒன்றை குறிப்பிடவும்?

(அ) வரிகளின் நிகர வருமானத்தினை மத்திய மற்றும் மாநில அரசு இடையில் விநியோகிக்க பரிந்துரைப்பது.

(ஆ) மாநிலங்களுக்கு உதவுவதற்காக மானியங்களை நிர்வகிக்க வேண்டிய கொள்கைகளை பரிந்துரை செய்வது.

(இ) பஞ்சாயத்து மற்றும் நகராட்சிகளின் வளங்களை கூடுதலாக ஒரு மாநிலத்தின் ஒருங்கிணைந்த நிதியை அதிகரிக்க நடவடிக்கைகளை பரிந்துரை வழங்குவது

**(ஈ) நாட்டின் வளங்களை மிகவும் திறம்பட பயன்படுத்துவதற்கான திட்டத்தை வகுத்தல்**

(உ) விடை தெரியவில்லை

12. 2005-2006ம் ஆண்டில் தொடங்கப்பட்ட, கிராப்புற இந்தியாவுக்கு அடிப்படை வசதிகள் மற்றும் உள்கட்டமைப்பை வழங்குவதற்கான திட்டம் என அழைக்கப்படுவது.

(அ) பிரதமரின் கிராம சாலைத்திட்டம்

**(ஆ) இந்திய கட்டுமானம் மற்றும் கிராமப்புற வீடுகள்**

(இ) தேசிய கிராமப்புற வாழ்வாதாரப் பணி

(ஈ) தேசிய கிராமப்புற சுகாதாரப் பணி

(உ) விடை தெரியவில்லை

13. கடன் அங்கீகார திட்டத்தை அறிமுகப்படுத்தியது எது?

(அ) பன்னாட்டு பணநிதி நிறுவனம் **(ஆ) இந்திய ரிசர்வ் வங்கி** (இ) வணிக வங்கி

(ஈ) எக்ஸிம் வங்கி (உ) விடை தெரியவில்லை

14. பின்வரும் கூற்றை கவனி:

1. உலகப் பொருளாதாரத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் எட்டாவது இடத்தை இந்தியா பெற்றுள்ளது.

2. உலகப் பொருளாதாரத்தில் வாங்கும் சக்தியில் இந்தியா மூன்றாம் இடத்தை பெற்றுள்ளது.

3. உகாண்டா, G–20ல் சேர்க்கப்பட்டுள்ளது

4. 2017ல் கணக்கெடுப்பின்படி உலகத்திலேயே சீனா அதிக இணையதள சேவை பயனர்கள் கொண்டுள்ளது.

மேலே கண்டவற்றுள் எவை சரியான கூற்றுகள்:

(அ) 1 மற்றும் 2 மட்டும் (ஆ) 2 மற்றும் 3 மட்டும் **(இ) 2 மற்றும் 4 மட்டும்** (ஈ) 4 மட்டும்

(உ) விடை தெரியவில்லை

15. விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை கழகத்தின் நோக்கம்

1. விவசாய உற்பத்தி செய்த பொருட்களை அதிக விலைக்கு விற்பனை செய்வது

2. உற்பத்தியின் பொருட்களின் அதிகபடியான கடன் வழங்குதல்

3. சௌகரியமான விற்பனை சந்தையை செய்தல்

4. கெட்டு போகாமல் பொருள்களை காப்பது

(அ) 1 மட்டும் சரி (ஆ) 1, 2 மட்டும் சரி **(இ) 1, 2, 3 மட்டும் சரி** (ஈ) 3, 4 மட்டும் சரி

(உ) விடை தெரியவில்லை

16. BRICs நாடுகளை உள்ளடக்கிய விடையை தெரிவு செய்க:

(அ) பிரிட்டன், ரியோடி ஜனரியோ, இத்தாலி, காங்கோ, சுவிட்சர்லாந்து

**(ஆ) பிரேசில், இரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆப்பிரிக்கா**

(இ) பூட்டான், ருமேனியா, இந்தோனேஷியா, கனடா, சுமத்ரா

(ஈ) பங்களாதேஷ், இரஷ்யா, ஐஸ்லாந்து. சிலி, சுவீடன்

(உ) விடை தெரியவில்லை

17. கருப்பு பணம் தொடர்பான கீழ்காணும் கூற்றில்/கூற்றுகளில் சரியானவற்றை தேர்வு செய்யவும்.

(அ) இந்த வகையான இருப்பு உடமைகளின் உற்பத்தி பற்றி அரசுக்கு தகவல் கொடுக்கப்படுவதில்லை.

(ஆ) 1983–84ஆம் ஆண்டில், கருப்பு பணத்தின் மதிப்பீடானது, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 95% ஆகும்.

(இ) "வரி ஏமாற்று புகலிடம்"என்பவை பொதுவாக பெரிய நாடுகளாக இருக்கும். மேலும் அந்த நாடுகள், குடியேற எண்ணும் வெளிநாட்டவர் மீது அதிக வரிச்சுமையை திணிக்கும்.

**(அ) அ மட்டும்** (ஆ) ஆ மட்டும் (இ) அ மற்றும் ஆ மட்டும்

(ஈ) ஆ மற்றும் இ மட்டும் (உ) விடை தெரியவில்லை

18. கூற்று 1: 0–6 வயது குழந்தைகளின் எண்ணிக்கை 2001 மக்கள் தொகை கணக்கெடுப்பை ஒப்பிடும் போது 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பில் சுமார் 50 லட்சம் வரை குறைந்துள்ளது. இந்த உண்மை முக்கிய பிரச்சனையாக 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கூற்று 2: 2001 மற்றும் 2011ம் ஆண்டுகளுக்கு இடையிலான மக்கள் தொகை வளர்ச்சி வீதம் 1991 மற்றும் 2001ம் ஆண்டுகளுக்கு இடையிலான மக்கள் தொகை வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடுகையில் குறைவானது ஆகும்.

(அ) கூற்று 1 மற்றும் 2 சரி, ஆனால் கூற்று 2 கூற்று 1 –கான விளக்கம் அல்ல.

(ஆ) கூற்று 1 தவறு கூற்று 2 சரி

(இ) கூற்று 1 மற்றும் கூற்று 2 இரண்டும் தவறு

**(ஈ) கூற்று 1 மற்றும் கூற்று 2 இரண்டும் சரி. கூற்று 2 கூற்று 1–க்கான சரியான விளக்கம்**

(உ) விடை தெரியவில்லை

19. உலக பொருளாதாரத்தில் சமீப போக்குகளில் எவை இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) அமெரிக்க டாலர்–இந்திய ரூபாய் "விற்கும்–வாங்கும்"பரிமாற்றத்தை செயல்படுத்த காரணமாக அமைந்துள்ளது?

(அ) கோவிட்–19 பெருந்தொற்றால் உலகளவில் நிதி சந்தைகள் சந்தித்து வரும் விற்பனை தொடர்பான தீவிர அழுத்தம்

(ஆ) உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை சரிவு

(இ) வளர்ந்து வரும் சந்தைகளின் நாணய மதிப்பு மேல்நோக்கியஅழுத்தத்தை சந்திப்பது

(அ) அ மட்டும் (ஆ) ஆ மற்றும் இ மட்டும் **(இ) அ மற்றும் ஆ மட்டும்**

(அ) இ மட்டும் (உ) விடை தெரியவில்லை

20. மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) தொடர்பான சரியான கூற்றை/கூற்றுகளை தேர்வு செய்யவும்.

(அ) அது ஓர் குறிப்பிட்ட கால வரையறைக்கு உரித்தானது அல்ல

(ஆ) அது "பொருட்கள்" தொடர்பான ஓர் அளவீடேயாகும், "சேவை" தொடர்பானது அல்ல

(இ) அது பணம் சாராத அளவீடாகும்

(அ) (அ) சரி; (ஆ) மற்றும் (இ) தவறு (ஆ) (ஆ) மற்றும் (இ) சரி; (அ) தவறு

**(இ) (அ), (ஆ), (இ) தவறு** (ஈ) ஆ சரி; அ மற்றும் இ தவறு (உ) விடை தெரியவில்லை

21. தமிழ் நாட்டின் எந்த மாவட்டம் மனித மேம்பாட்டு அட்டவணையின் கடைசியிடம் வகிக்கின்றது?

(அ) விழுப்புரம் (ஆ) தேனி (இ) பெரம்பலூர் **(ஈ) அரியலூர்** (உ) விடை தெரியவில்லை

22. குழந்தை மேம்பாட்டுக் குறியீடு பின்வரும் காரணிகளைக் கணக்கில் எடுத்துக் கொள்கிறது.

அ. கல்வி ஆ. வருமானம் இ. சுகாதாரம் ஈ. ஊட்டச்சத்து நிலை

சரியான சேர்க்கையை தேர்வு செய்யவும்:

(அ) அ, ஆ மற்றும் இ **(ஆ) அ, இ மற்றும் ஈ** (இ) அ, ஆ மற்றும் ஈ

(ஈ) ஆ, இ மற்றும் ஈ (உ) விடை தெரியவில்லை

23. கீழ்கண்ட கூற்றுக்களை கருதவும்:

1. 1950ஆம் ஆண்டுகளில் இந்திய குடும்ப கட்டுபாட்டு திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

2. குடும்ப கட்டுபாடு திட்டமானது புதிய–மார்க்சிய அணுகுமுறையின் அடிப்படையில் செய்யப்பட்டது

3. தேசிய நெருக்கடி முடிவுக்கு வந்தவுடன் குடும்ப கட்டுப்பாடு கட்டாயமாக்கப்படவில்லை

4. திட்டமிடல் மற்றும் செயல்படுத்தல் மத்திய அரசால் மேற்கொள்ளப்பட்டது

சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்:

(அ) 2 மற்றும் 3 மட்டும் சரி **(ஆ) 1 மற்றும் 3 மட்டும் சரி** (இ) 2 மற்றும் 4 மட்டும் சரி

(ஈ) 1 மற்றும் 4 மட்டும் சரி (உ) விடை தெரியவில்லை

24. "நிலை நிறுத்தும் அபிவிருத்தி" எனும் வார்த்தை துள்ளியமாக குறிப்பது

**(அ) இயற்கை சொத்துக்கள் முடிவுறக்கூடியது**

(ஆ) இயற்கை சொத்துக்கள் முடிவுறாதது

(இ) இயற்கை சொத்துக்கள் வளங்கள் அல்ல

(ஈ) தற்போதைய வளர்ச்சி மாதிரி இயற்கை ஸ்திரத்தன்மையை ஊக்குவிக்கிறது

(உ) விடை தெரியவில்லை

25. நிதி ஆயோக்கின் பணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இதில் எது/எவை தவறாக கொடுக்கப்பட்டுள்ளது

அ. கூட்டுறவு கூட்டாட்சியை வளர்த்தல்

ஆ. ஐந்தாண்டு திட்டங்களுக்கு இறுதி ஒப்புதல் அளித்தல்

இ. ஊரக வளர்ச்சிக்கான திட்டங்களை அமல்படுத்துதல்

ஈ. மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு வரி வசூல் தொடர்பாக அறிவுரை வழங்குதல்

(அ) அ மற்றும் ஆ (ஆ) அ, ஆ மற்றும் இ **(இ) ஆ மற்றும் ஈ**

(ஈ) ஈ மட்டும் (உ) விடை தெரியவில்லை

26. நிதி ஆயோக்கின் குறைந்தபட்ச ஆதரவு விலை (MSP) தொடர்பான மதிப்பீடு அறிக்கையின் படி கீழ்காணும் எந்த கூற்று/கூற்றுகள் சரியானது/சரியானவை ஆகும்?

(அ) "குறைந்தபட்ச ஆதரவு விலை"விதைப்புக் காலத்திற்கு முன்பே அறிவிக்கப்படும்.

(ஆ) "குறைந்தபட்ச ஆதரவு விலை"யின் நோக்கம் விவசாயிகளுக்கு விலை உத்தரவாதம் அளிப்பது ஆகும்.

(இ) உலகமயமாக்கலினால் ஏற்பட்டுள்ள தங்கு தடையற்ற வர்த்தகத்தின் விளைவாக விவசாய பொருள்களின் விலையில் ஏற்படும் தேவையற்ற ஏற்ற இறக்கங்களில் இருந்து விவசாயிகளை காப்பது முக்கியமல்ல.

(அ) அ, இ மட்டும் **(ஆ) அ, ஆ மட்டும்** (இ) ஆ மட்டும் (ஈ) இ மட்டும்

(உ) விடை தெரியவில்லை

27. நோபல் பரிசு பெற்ற பொருளாதார அறிஞர் அபிஜித் பேனர்ஜியின் கூற்றுப்படி கோவிட் பெருந்தொற்றால் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்த நெருக்கடியால் ஏற்பட்டுள்ள பொருளாதார வலியை குறுகிய கால அடிப்படையில் கடப்பதற்கான தீர்வாக அவர் கூறுவது யாது?

(அ) பெரு நிறுவனங்களின் கைகளில் அதிக பணம் கொண்டு சேர்ப்பது

(ஆ) பெரு நிறுவனங்களுக்கு வரி குறைப்பு செய்வது

**(இ) ஏழை எளிய மக்களின் கைகளில் அதிக பணம் கொண்டு சேர்ப்பது**

(ஈ) ஏழை எளிய மக்களுக்கு வரிகுறைப்பு செய்வது

(உ) விடை தெரியவில்லை

28. இந்திய பொருளாதாரத்தை பொறுத்தவரை, கோவிட் பெருந்தொற்றால் இந்த நிதியாண்டின் முதல் கால் பகுதியில் (ஏப்ரல்–ஜீன்) பொருளாதார நடவடிக்கைகளில் முன்பு எப்போதும் இல்லாத பெரும் முடக்கம் ஏற்பட்டது.

கீழ்காணும் கூற்றுகளில் எவை இந்த உண்மையை பிரதிபலிக்கின்றன?

(அ) கட்டுமானப் பணிகளில் சுமார் 50.3% சுருக்கம்

(ஆ) உற்பத்தி துறையில் சுமார் 39.3% சுருக்கம்

(இ) வேளாண்மை, வனவியல் மற்றும் மீன்வள உற்பத்தியில் சுமார் 10% சுருக்கம்

(ஈ) வர்த்தகம், தங்கும் விடுதி/உணவகம் மற்றும் போக்குவரத்து துறைகளில் சுமார் சுருக்கம்

**(அ) அ மற்றும் ஆ மட்டும்** (ஆ) அ மற்றும் இ மட்டும் (இ) ஆ மற்றும் இ மட்டும்

(ஈ) ஆ மற்றும் ஈ மட்டும் (உ) விடை தெரியவில்லை

29. இந்தியாவில் சமீப காலங்களில் நடைபெறும் வங்கி இணைப்பு தொடர்பான கூற்றுகளில் சரியானதை தேர்வு செய்யவும்.

(அ) பெரிய வங்கிகள் சந்தையிலிருந்து அதிகமாக கடன் வாங்கும் திறன் கொண்டவையாக இருக்கும் என்பதால், பொருளாதாரம் மீட்டெடுக்கப்படும்

(ஆ) வங்கி இணைப்பு, வங்கித் துறையின் செயல்திறனை உயர்த்தும்

(அ) அ மட்டும் **(ஆ) ஆ மட்டும்** (இ) அ மற்றும் ஆ (ஈ) அ இல்லை ஆ இல்லை

(உ) விடை தெரியவில்லை

30. 2019–2020ம் ஆண்டின் சேவை மற்றும் சரக்கு வரி வசூலில் குறைந்து வரும் போக்கு காணப்படும் மாநிலங்கள் யாவை?

(அ) உத்திர பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் அசாம்

(ஆ) ஹரியானா, ராஜஸ்தான் மற்றும் மேகாலாயா

(இ) ஆந்திர பிரதேசம், மத்தியப் பிரதேசம் மற்றும் மணிப்பூர்

**(ஈ) மஹாராஷ்ட்ரா, மேற்கு வங்கம் மற்றும் தமிழ்நாடு**

(உ) விடை தெரியவில்லை

31. பின்வரும் கூற்றை கவனி:

நிதிக் கொள்கையின் நோக்கங்களாவன

1. மூலதன உருவாக்கம் 2. சமமான பகிர்வு 3. வேலைவாய்ப்பின்மை 4. சமவட்டார வளர்ச்சி

இவற்றுள், எவை சரியான கூற்று?

(அ) 2, 3 மற்றும் 4 **(ஆ) 1, 2 மற்றும் 4** (இ) 1, 3 மற்றும் 4 (ஈ) 1, 2 மற்றும் 3

(உ) விடை தெரியவில்லை

32. பின்வரும் கூற்றை கவனி:

நுகர்வுசார்பை தூண்டுகின்ற அகவய ஆவன காரணிகளாவன:

1. முன்னெச்சரிக்கை நோக்கம் 2. நீர்மை தன்மை நோக்கம்

3. பேராசை நோக்கம் 4. தலையிடாக்கொள்கை

மேல்காணும் கூற்றுகளில் சரியானவற்றை தேர்வு செய்யவும்:

(அ) 3 மற்றும் 4 **(ஆ) 1, 2 மற்றும் 3** (இ) 1, 2 மற்றம் 4 (ஈ) 1 மற்றும் 4

(உ) விடை தெரியவில்லை

33. மத்திய அரசின் நேரடி வருவாயினத்தில் தொடர்பு இல்லாதது எது?

(அ) வருமானவரி (ஆ) சொத்து மற்றும் மூலதன வரி (இ) பண்டக மற்றும் பணி வரி

**(ஈ) பங்காதாய மற்றும் இலாப வரி** (உ) விடை தெரியவில்லை

34. இந்தியாவின் திட்டமிடலுக்கான வரைபடங்கள் முதலில் எந்த பொறியாளர் நிர்வாகியிடமிருந்து வந்தன

**(அ) M. விஸ்வேஸ்வரயா** (ஆ)நேரு (இ) S.N. அகர்வால் (ஈ) M.N. ராய் (உ) விடை தெரியவில்லை

35.பின்வரும் கூற்றை கவனிக்க:

1. பீகார், மத்திய பிரதேசம், இராஜஸ்தான் மற்றம் உத்திர பிரதேசம் ஆகியவை அதிக மக்கள் தொகை கொண்ட மாநிலமாகும்

2. கேரளா மிகக் குறைந்த பிறப்பு விகிதம் கொண்டுள்ளது

3. மேற்கு வங்காளம் மிகக் குறைந்த இறப்பு விகிதத்தை கொண்டுள்ளது.

4. மக்கள் தொகை அடர்த்தி என்பது மொத்த மக்கட் தொகை/அப்பகுதியின் நிலப்பரப்பு

மேலே கண்டவற்றுள் சரியானவை எவை?

(அ) 1 மற்றும் 3 (ஆ) 2 மற்றும் 3 (இ) 1, 2 மற்றும் 4 (ஈ) 3 மற்றும் 4

(உ) விடை தெரியவில்லை

36. கீழ்காணும் கூற்றுகளில் "T–Bill" (Treasury bill) தொடர்பான சரியானவற்றை தேர்வு செய்யவும்.

(அ) அவை இந்திய ரிசர்வ் வங்கியால் வெளியிடப்படுகின்றன.

(ஆ) அவை மத்திய அரசால் வெளியிடப்படுகின்றன.

(இ) அவற்றின் மீது வட்டி ஈட்ட இயலாது

(ஈ) அவை நெடுங்கால கடன் பத்திரங்கள் ஆகும்.

(அ) அ மற்றும் ஈ மட்டும் **(ஆ) ஆ மற்றும் இ மட்டும்** (இ) ஆ, இ மற்றம் ஈ

(ஈ) ஆ மற்றும் ஈ மட்டும் (உ) விடை தெரியவில்லை

37. 2019ம் ஆண்டு நிதி ஆயோக் வெளியிட்ட இந்தியாவின் நிலைக்கத்தக்க வளர்ச்சிக்கான இலக்குகள் குறியீட்டில், தமிழ்நாடு பெற்றிருக்கும் இடம்

(அ) முதலாவது (ஆ) இரண்டாவது **(இ) மூன்றாவது** (ஈ) நான்காவது

(உ) விடை தெரியவில்லை

38. ஒரு முதலீடு மற்றும் அதிகரிக்கும் மூலதன வெளியீட்டு விகிதத்தைக் குறைக்க, பின்வரும் அணுகு முறைகள் நிறைவேற்றப்பட வேண்டும்

அ. நிலையான செயல்திறன்

ஆ. மாறும் செயல்திறன்

இ. ஒதுக்கீடு செயல்திறன்

ஈ. தொழில்நுட்ப செயல்திறன்

(அ) அ, இ, ஈ மட்டும்

(ஆ) அ, ஆ, இ மட்டும்

(இ) அ, ஆ, ஈ மட்டும்

**(ஈ) ஆ, இ, ஈ மட்டும்**

(உ) விடை தெரியவில்லை

39. கீழ்வரும் கருத்து மற்றும் காரணம் ஆகியவற்றை கவனிக்கவும்:

கருத்து (A): அரசாங்க முடிவெடுத்தலில், பணக்காரர்கள் மற்றும் அதிகாரம் படைத்த மக்களின் செல்வாக்கை குறைப்பது என்பது "ஜனநாயக விரிவாக்கம்" எனும் கருத்தின் சவால் ஆகும்.

காரணம் (R): மக்கள் பங்கெடுப்பு மற்றும் அவர்களின் கட்டுப்பாடு என்பது பணக்காரர்களின் செல்வாக்கு குறைக்கப்படும் போது மட்டுமே பொருளுடையதாக மாறும். இதுவே ஜனநாயகத்தை ஆழப்படுத்தும் நடவடிக்கையுமாகும்.

**(அ) A தவறு ஆனால் R மட்டும் சரி**

(ஆ) A மற்றும் R இரண்டும் சரி

(இ) R தவறு ஆனால் A சரி

(ஈ) A மற்றும் R இரண்டும் சரி அல்ல

(உ) விடை தெரியவில்லை

40. உறுதிபடக் கூறல் (உ): கிராம மக்கள் சுகாதார மையங்களை எளிதாக அணுகும் போது அம்மக்களிடையே தொற்று நோய்களை அடையாளம் காணவும், கவனிக்கவும், தடுக்கவும் உதவுகிறது.

காரணம் (கா): கிராமப்புற சுகாதார உள்கட்டமைப்பின் உகந்த பயன்பாடு எதிர்நோக்கும் பலனைத் தரும்.

**(அ) (உ), (கா) இரண்டும் சரி, இத்துடன் (கா) என்பது (உ)வின் சரியான விளக்கம்**

(ஆ) (உ), (கா) இரண்டும் சரி, இத்துடன் (கா) என்பது (உ)வின் சரியான விளக்கம் அல்ல

(இ) (உ) சரி ஆனால் (கா) தவறு

(ஈ) (உ) தவறு ஆனால் (கா) சரி

(உ) விடை தெரியவில்லை

41. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில், மாற்றுத் திறனாளிகளை பணியமர்த்திய முதல் மாநிலம் எது?

(அ) கேரளா **(ஆ) தமிழ்நாடு** (இ) குஜராத் (ஈ) கர்நாடகா (உ) விடை தெரியவில்லை

42. ஜனவரி 2019–ல் மூன்று வங்கிகளை ஒருங்கிணைக்க இந்திய அரசு அனுமதி வழங்கியது. கீழ்கண்ட எவ்வங்கி இந்த ஒருங்கிணைப்பில் இடம் பெறவில்லை?

(அ) தேனா வங்கி (ஆ) விஜயா வங்கி (இ) பரோடா வங்கி **(ஈ) லஷ்மி விலாஸ் வங்கி**

(உ) விடை தெரியவில்லை

43. தமிழ்நாட்டில் உள்ள கடலோர மக்களுக்கான சுனாமிக்கு பின் நிலைத்த வாழ்வாதார திட்டத்திற்கு –---------------- உதவுகிறது.

(அ) உலக வங்கி **(ஆ) விவசாய மேம்பாட்டிற்கான சர்வதேச நிதியம்**

(இ) ஆசிய வளர்ச்சி வங்கி (இ) சர்வதேச நாணய நிதியம் (உ) விடை தெரியவில்லை

44. ஏன் நாம் ஒரு பணக்கொள்கையினை வைத்துள்ளோம்?

1. வரி வருவாயை அதிகரிக்க 2. பொருளாதார வளர்ச்சி

3. வறுமையை குறைத்திட 4. பண வீக்கத்தை கட்டுப்படுத்திட

(அ) 1 மற்றும் 2 (ஆ) 3 மற்றும் 4 (இ) 1 மற்றும் 3 **(ஈ) 2 மற்றும் 4**

(உ) விடை தெரியவில்லை

45. இந்தியாவில் "புதிய பசுமை புரட்சியின்" தந்தை

(அ) டி.டி. கிருஷ்ணமாச்சாரி (ஆ) எஸ். மோகன ரெங்கன் **(இ) எம்.எஸ். சுவாமிநாதன்**

(ஈ) என். சுப்பரமணியன் (உ) விடை தெரியவில்லை

46. தேசிய உற்பத்திக் கொள்கையின் நோக்கங்கள்:

1. 2022–ல் உற்பத்தி தொழில் துறையில் 100 மில்லியன் கூடுதல் பணிகளை உருவாக்குதல்

2. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உற்பத்தி துறையின் பங்கினை அதிகரித்தல்

3. உற்பத்தி துறையில் கூடுதல் உள்நாட்டு மதிப்பு மற்றும் தொழில்நுட்பங்களை அதிகரித்தல்

4. இந்திய உற்பத்தி துறைக்கு உலகளவில் போட்டியினை உருவாக்குதல்

(அ) 1 மற்றும் 3 மட்டும் (ஆ) 2 மற்றும் 4 மட்டும் (இ) 1, 2 மற்றும் 4 மட்டும்

**(ஈ) 1, 2, 3 மற்றும் 4** (உ) விடை தெரியவில்லை

47. சரியான கூற்றினைத் தேர்வு செய்க:

1. பிரதான் மந்திரி அவாஸ் யோஜனா திட்டம் 2022ஆம் ஆண்டிற்குள் "அனைவருக்கும் வீடு" என்ற இலக்கினை அடைவதைக் குறிக்கோளாகக் கொண்டது

2. மேலும் அது 2022ஆம் ஆண்டிற்குள் "விருப்பமுள்ள ஊரக மக்கள் அனைவருக்கும் தூய்மையான சமையல் வசதி" என்ற இலக்கினை அடைவதையும் குறிக்கோளாகக் கொண்டது

3. 1 மற்றும் 2 இரண்டும்

**(அ) 1 சரி ஆனால் 2 தவறு** (ஆ) 1 தவறு ஆனால் 2 சரி (இ) 3 சரி

(ஈ) 3 தவறு (உ) விடை தெரியவில்லை

48. கலப்பு பொருளாதாரம் ------------- குறிக்கிறது

(அ) சிறு மற்றும் பேரளவுத் தொழில்கள் இணைந்து செயல்படுதல்

**(ஆ) பொது மற்றும் தனியார் துறைகள் இணைந்து செயல்படுதல்**

(இ) உழைப்பு தொழில்நுட்பச் செறிவு மற்றும் மூலதன தொழில் நுட்பச் செறிவு இணைந்து செயல்படுதல்

(ஈ) தேசிய மற்றும் அயல்நாட்டு நிறுவனங்கள் இணைந்து செயல்படுதல்

(உ) விடை தெரியவில்லை

49. பட்டியல் 1 மற்றும் 2ஐ பொருத்தி கீழேக் கொடுக்கப்பட்டுள்ள சரியான விடையை தேர்வு செய்க:

| பட்டியல் 1 | பட்டியல் 2 |
|---|---|
| (அ) இரண்டாவது நிதிக்குழு | 1. சி. ரங்கராஜன் |
| (ஆ) ஏழாவது நிதிக்குழு | 2. கே. சந்தானம் |
| (இ) பன்னிரெண்டாவது நிதிக்குழு | 3. ஜே.எம். சேலெட் |

| | (அ) | (ஆ) | (இ) |
|---|---|---|---|
| **(அ)** | **2** | **3** | **1** |
| (ஆ) | 1 | 3 | 2 |
| (இ) | 3 | 1 | 2 |
| (ஈ) | 2 | 1 | 3 |

(உ) விடை தெரியவில்லை

50. "மேக் இன் இந்தியா" திட்டம் (இந்தியாவை உருவாக்குதல்) நோக்கமானது

(அ) விவசாயத்தை வளர்த்தல் (மேம்படுத்துதல்)

**(ஆ) உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு முதலீட்டாளர்களை இந்தியாவில் முதலீடு செய்ய அழைத்தல்**

(இ) கலாச்சாரத்தை வளர்த்தல்

(ஈ) மத்தினை வளர்த்தல்

(உ) விடை தெரியவில்லை

51. பொருளாதார முன்னேற்றத்தை கணிக்க சிறந்த காரணியாக திகழ்வது

(அ) சேமிப்பு உயருதல் (ஆ) முதலீடு உயருதல் (இ) முதலீட்டு–உற்பத்தி சதவீதம் உயருதல்

**(ஈ) வாழ்க்கைத்தரம் உயருதல்** (உ) விடை தெரியவில்லை

winmeen.com